ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2162/28 - 2020 පෙබරවාරි මස 12 වැනි බදාදා - 2020.02.12

2162/28 ஆம் இலக்கம் - 2020ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/WM/LND/2/5/AQUIS/29.

காணி அமைச்சின் இல.: 4-3/8/2017/பீசீ/518.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில், உடபலாத கோறளையின் சிறு பிரிவில், இல. 50 ஏ அம்பேவெல கிராம அலுவலர் பிரிவில், ஹெவனகுபுர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபடம் ப 736 மற்றும் 2019.12.23 ஆந் திகதி ஆரம்ப வரைபின் துண்டு இலக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ள முழு காணியின் 0.9284 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டு.

01. **துண்டு இல. 1;**

காணியின் பெயர்: அம்பேவெல தோட்டம் (தவாறனை பிரிவு); விபரம்: வீட்டுத்தோட்டம், 15 - 20 வயது அளவிலான கலப்பு விவசாயம் மற்றும் இரண்டு நிரந்தரக் கட்டிடம் உண்டு; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு ஆணை சபை; விஸ்தீரணம்: 0.9284 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அந்தந்த காணி துண்டு சம்பந்தமாக கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ள நேரத்தில்



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வெலிமடை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்த வேண்டும்.

| திகதி | நேரம் | காணித்துண்டு |
|---|---|---|
| 2020.03.02 | மு. ப. 10.00 | 1 |

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எம். சீ. வீரசிங்க,
பிரதேச செயலாளர்,
வெலிமடை.

பிரதேச செயலகம்,
வெலிமடை,
2020, பெப்புருவரி 11.

02 - 571